மிதுசா கொமினிக்கேசன்ஸ்
உள்ளூர் / வெளியூர்
தொலைத் தொடர்பு
FAX சேவை
★ 24 மணித்தியால சேவை ★
58, 59, முதலாவது மாடி,
புதிய பஸ் நிலையம்,
வவுனியா.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

இரவு வேளையில் வெளிநாட்டு
தொலைபேசி அழைப்புக்கள்
எடுப்பவர்களுக்கு
இலவச தங்குமிட வசதி
வழங்கப்படும்.
மிதுசா கொமினிக்கேசன்ஸ்
முதலாவது மாடி,
புதிய பஸ் நிலையம், வவுனியா.
தொலைபேசி: 024 { 2033 / 2053

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 08 புதன்கிழமை (22-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 56

# சீனக்குடா விமானத்தளத்தில் பயங்கரக் குண்டு வெடிப்பு!

## ஆயுதக் களஞ்சியம் தகர்ந்தது! 40 விமானப் படையினர் பலி!!

கொழும்பு, ஜனவரி 22

திருகோணமலை, சீனக்குடாவில் உள்ள விமானத் தளத்தில் நேற்றுக் காலை மிகப் பயங்கரமான குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்தது. அதிசக்திவாய்ந்த குண்டு ஒன்று அங்கு வெடித்ததைத் தொடர்ந்து தளத்தில் இருந்த ஆயுதக் களஞ்சியம் தகர்ந்தது. சில மணி நேரம் பயங்கர ஓசை திருமலை நகரம் வரை தொடர்ச்சியாக விரவியது.

இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இராணுவத் தளபாடங்கள் பலவும் அழிந்தன.; விமானத் தளக் கட்டடங்கள் இடிந்து விழுந்து சேதமடைந்தன; குண்டு வெடிப்பில் சிக்குண்டு 40 விமானப் படை வீரர்கள் மாண்டனர்; மற்றும் 60 பேர் வரை காயமுற்றனர்.

இடிந்து விழுந்த கட்டடங்களில் இருந்து நேற்று மாலை வரை சடலங்கள் மீட்கப்பட்டன என்றும், இறந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

விமானத் தளத்தின் பிரதான ஆயுதக் குதம் (களஞ்சியம்) ஒன்றுக்கு அருகில் பெரும் சத்தத்துடன் குண்டு வெடித்தது. கிட்டங்கிக்குச் சற்றுத் தொலைவிலேயே போர் விமானங்கள் பலவும் நிறுத்தப்பட்டிருந்ததாக செய்தி ஏஜன்சிகள் தெரிவித்தன.

குண்டு வெடித்த இடத்துக்கு அருகில் கடமையில் இருந்த விமானப்படை சிப்பாய்களின் உடல்கள் துண்டு துகள்களாகச் சிதறியதாகவும், கட்டடங்களுக்குள் அகப்பட்டு மாண்ட படையினரின் சடலங்கள் அடையாளம் காண முடியாதவாறு நசிந்து, சிதைந்து காணப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

முதலாவது குண்டு வெடித்ததன் பின்னர் ஒரே தொடர்ச்சியாகப் பெரும் சத்தங்களுடன் பல குண்டுகள் வெடித்ததால் பத்துப் பதினைந்து மைல் சுற்றாடல் அதிர்ந்து நடுங்கியது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த படைவீரர்கள் விமான மூலம் கொழும்புக்குக்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## முருங்கன், முல்லைத்தீவில் குண்டு வீச்சுத் தாக்குதல்!

நேற்றுக்காலை 7-30 மணியளவில் மன்னார் மாவட்டத்தின் முருங்கன் மற்றும் 11ஆம் கட்டை ஆகிய இடங்களில் அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

நேற்று முன்தினம் காலை 11-30 மணியளவில் 11 ஆம் கட்டையடியில் 3 ''சியாமசெற்றி'' விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின என்றும் —

முல்லைத்தீவு 3ஆம் கட்டையிலும் நேற்று முன்தினம் ஹெலிக்கொப்டர் ஒன்றும், இரு குண்டு வீச்சு விமானங்களும் தாக்குதல்களை நடத்தின என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-த]

## விமானங்களும் சேதமடைந்தன!

கொழும்பு, ஜன. 22

சீனக்குடா விமானத் தளத்தில் நேற்றுக்காலை இடம் பெற்ற வெடிகுண்டு வெடிச் சம்பவத்தில் விமானங்கள் சில சேதமடைந்தன.

அச்சம்பவத்தை நேரிற் கண்டவர்கள் இத்தகவலை தெரிவித்தனர் என்று கொழும்பில் உள்ள பி. பி. ஸி. செய்தியாளர் அறிவித்தார்.

விமானங்கள் சேதமடைந்தது குறித்து மேலதிக தகவல்கள் ஏதும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை (உ-எ)

## குண்டு வெடிப்பில் புலிகளுக்கு தொடர்பு?

### இந்திய வானொலி சொல்கிறது

புதுடில்லி, ஜன. 22

சீனக்குடா விமானத் தளக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் விடுதலைப் புலிகளின் தொடர்பை நிராகரிக்க முடியாது.

— இவ்வாறு சுயேச்சை வட்டாரங்கள் தெரிவித்தன என்று இந்திய வானொலி அறிவித்தது.

சலப்பையாறு - இறக்கக்கண்டிப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 20 படையினர் உயிரிழந்த சம்பவத்துக்குப் பின்னர் இரண்டு மணித்தியாலம் கழித்து, சீனக்குடா குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

இதேவேளை—

ஈழத் தமிழ் அகதிகளில் முதலாவது தொகுதியினர் இன்று

[3 ஆம் பக்கம் பார்க்க]

# குச்சவெளி பகுதியில் அதிரடி! 20 படையினர் உயிரிழப்பு!!

## இராணுவ அணி அழிந்தது

திருகோணமலை, ஜனவரி 22

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளிக்கு அருகே சலப்பையாறு என்ற இடத்தில் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் இருபது பேரைக் கொண்ட இராணுவ அணி ஒன்று முற்றாக அழிந்தது. பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

நேற்றுக்காலை 8-35 மணியளவில் சலப்பையாறு இராணுவ முகாமிலிருந்து குச்சவெளி இராணுவ முகாமுக்கு ரோந்து சென்ற படை அணி மீதே இரணைக்கேணி என்ற இடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தினர்.

முப்பது நிமிட நேரம் இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் படையணியில் வந்த 20 படையினரும் உயிரிழந்தனர்.

இதேவேளை—

தாக்குதலுக்கு இலக்கான படை அணிக்கு உதவுவதற்காக குச்சவெளி இராணுவ முகாமிலிருந்து இரண்டு டிரக் மற்றும் இரண்டு ஜீப்களில் வந்த இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகளின் மற்றொரு அணி தாக்குதலை

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 4 தமிழர் படையினர் சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், ஜன. 22

மட்டக்களப்பு காஞ்சிரக்காடு என்ற இடத்தில் நேற்று முன்தினம் காலையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் தமிழ்ப் பொதுமக்கள் நால்வர் உயிரிழந்தனர்.

சித்தாண்டியைச் சேர்ந்த சாமியார் துரைச்சாமி, துரைச்சாமி ராசா, சின்னையா வினாசித்தம்பி மற்றும் பண்டாரவளையைச் சேர்ந்த இளையதம்பி ஆகியோரே உயிரிழந்தவர்களாவர். கிருபை [வயது 20] என்பவர் காயமடைந்தார்.

இதே வேளை—

கொக்கட்டிச்சோலை இராணுவமுகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் அரசடித்தீவு முத்துலிங்க கோவிலடியில் 2 பொதுமக்களைக் கைது செய்து முகாம் கொண்டுசென்றனர்.

அரசடித்தீவைச் சேர்ந்த திருமேனி ஆனையன், ராசலிங்கம் லிங்கன் ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். [உ-த]

## தெற்கில் நூறு கைதிகள் தொடர்ந்து உண்ணாவிரதம்

லண்டன், ஜன. 22

தென்பகுதிச் சிறைகளில் கடந்த வாரம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த சுமார் நூறு கைதிகள் தமது போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக பி. பி. ஸி. நேற்று தெரிவித்தது.

எதுவித விசாரணையும் இன்றி நீண்டகாலம் சிறை வைக்கப்பட்டிருக்கும் கைதிகளே உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள 16 சிறைகளில் உள்ள 4 ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்டோர் இவ்வாறு கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

### ராஜீவ் கொலைச் சம்பவம்:

## கருணாநிதியின் மகனும் விரைவில் கைதாகலாம்!

சென்னை, ஜன. 22

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் தமிழ்நாடு சிறப்புப் புலனாய்வுக் குழுவினால் கருணாநிதியின் மகன் மு. க. அழகிரி விரைவில் கைது செய்யப்படுவார் என தமிழகத்தில் பேச்சடிபடுகிறது.

அழகிரியின் நெருங்கிய நண்பரான ஜோர்ஜ் என்பவரை புலனாய்வுக் குழுவினர் தேடி வருகின்றனர்.

பட்டினம்காத்தான் தடை முகாமில் கடமையிலிருந்த ஒரு பொலீஸ்காரரையும், பொதுமகன் ஒருவரையும் வான் ஒன்றில் வந்த ஈழப் போராளிகள் சுட்டுக் கொன்ற சம்பவத்தின் போது, அந்த வானில் இந்த ஜோர்ஜ் என்ற நபரும் இருந்ததாகக் கருதப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



நிபுணர்கள் வந்துசேரமுதல் வெடிச்சிட்டுது போலை......!

## மூவர் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜன. 22

சலப்பையாறில் நேற்று இராணுவ அணி மீது நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளின் போராளிகள் மூவர் வீரச்சாவு அடைந்தனர்.

மேஜர் குகதாஸ் [சிவானந்தன் முருகையா — திருகோணமலை], கப்டன் ஜெயன் [நாராயணன் தங்கராசா — பன்குளம்], கப்டன் உதயன் [கண்ணன் ராஜேந்திரன் — ஹட்டன்] ஆகிய மூவரே வீரமரணமடைந்தனர். [உ-த]

## ஈழ அகதிகளுடன் வெடி குண்டு நிபுணர்களும்!

கொழும்பு, ஜன. 22

சென்னையில் இருந்து 'அக்பர்' கப்பல் மூலம் புறப்பட்ட ஈழ அகதிகளுடன் பத்து வெடி குண்டு நிபுணர்களும் வருகின்றனர் என்று நேற்றைய கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அகதிகளின் பாதுகாப்புக் [illegible] 30 இந்திய கொமாண்டோக்களும் கப்பலில் வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. [ஒ-எ]

## ஆயுதங்கள் பெருமளவு மீட்பு!

திருகோணமலை, ஜனவரி 22

சலப்பையாறு தாக்குதலில் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ ஜி.பி.எம்.ஜி. துப்பாக்கி — 1
★ ஏ.கே.எல்.எம்.ஜி. துப்பாக்கி — 1
★ ரி-56 டக் ரக துப்பாக்கிகள் — 5
★ ரி-56-1 ரக துப்பாக்கிகள் — 5
★ ரி-56-2 ரக துப்பாக்கிகள் — 3
★ ரி-81 ரக துப்பாக்கிகள் — 5
★ ஏ.கே.எல்,ஜி. றம் ரவைக் கூடுகள் — 5
★ ரி-56 ரக ரவைக் கூடுகள் — 52
★ ரி-81 ரக ரவைக் கூடுகள் — 17
★ ஜி.பி.எம்.ஜி. ரவைத் தொடர்கள் — 475
★ ஏ.கே.எல்.எம்.ஜி. ரவைத் தொடர்கள் — 445
★ 7·62 ரக நடுத்தர ரவைகள் — 2,645
★ நேட்டோ ரவைகள் — 293.
★ ஜே.ஆர். ரக கைக் குண்டுகள் — 3
★ மற்றும் பெருமளவு இராணுவ தளபாடங்கள் [உ-த]

## உதவி அரச அதிபர் உட்பட ஐவர் படகு விபத்தில் பலி!

மட்டக்களப்பு வாவியில் இடம் பெற்ற மற்றும் ஒரு படகு விபத்தில் உதவி அரசாங்க அதிபர் உட்பட ஐவர் உயிரிழந்தனர்.

கடந்த சனிக்கிழமை இந்த விபத்து நிகழ்ந்தது.

பட்டிப்பளை உதவி அரசாங்க அதிபர் எஸ். ஜெய்தரன் [32 வயது] என்பவரே மரணமான உதவி அரசாங்க அதிபர் ஆவார்.

பொங்கல் தினம் இடம் பெற்ற படகு விபத்தில் மண்டூர் கொத்தணி அதிபர் உட்பட மூவர் மரணமாகியது தெரிந்ததே. ஒரு வார காலத்தில் தற்போது இரண்டாவது படகு விபத்து இடம் பெற்றுள்ளது. (இ)

## நெடுந்தீவிலிருந்து 30 பேர் இன்று வந்து சேருவர்!

யாழ்ப்பாணம், ஜன. 22

இராணுவ நடவடிக்கைகளை அடுத்து யாழ்ப்பாணம் வரமுடியாமல் நெடுந்தீவில் தங்கியிருக்கும் சுமார் முப்பது பொதுமக்கள் இன்று நண்பகல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[3 ஆம் பக்கம் பார்க்க]

# பருத்தித்துறைப் பகுதியில் பொம்மர் தாக்கு! 2 பேர் பலி!!

வடமராட்சி, ஜன. 22

வடமராட்சியில் பருத்தித்துறை மற்றும் மணற்காட்டுப் பகுதிகளில் ஸ்ரீலங்கா விமானப் படையினரின் ''சியாமா செற்றி'' பொம்மர்கள் நேற்று முற்பகல் நடத்திய குண்டு வீச்சில் இருவர் உயிரிழந்தனர்; இருவர் காயமடைந்தனர்; பல வீடுகள் சேதமடைந்தன.

நேற்று முற்பகல் சுமார் 10-15 மணியளவில் ஹெலி ஒன்று சகிதம் பருத்தித்துறைப் பகுதியை வட்டமிட்ட இரு பொம்மர்கள் நாலாம் குறுக்குத்தெருச் சந்தியில் மாறி மாறி ஐந்து குண்டுகளை வீசின.

குண்டு வீச்சுக்கு இலக்காகி தபால் ஊழியரான — தும்பளை மேற்கைச் சேர்ந்த — சு. தெட்சணாமூர்த்தி [வயது 50] என்பவர் உயிரிழந்தார். என். கணேசன் [வயது 68] என்பவர் காயமடைந்தார்.

மயிலிட்டியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த அகதிப் பெண்ணான தேவரட்ணம் மரியரோசிலினி இருதயப் பாதிப்புக்குள்ளானார். மேலும் அப்பகுதியில் பத்துக்கும் அதிகமான [illegible] மடைந்தன.

இதேவேளை — மணற்காடு கரையோரப் பகுதியிலும் இந்த பொம்மர்கள் மூன்று குண்டுகளை வீசின. இதனால் ம. ரெஜினா [வயது 48] என்ற பெண்மணி உயிரிழந்தார். அன்ரனி நிரஞ்சனி [வயது 17] என்ற இளம் பெண் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரிக்கு [illegible] மணற்காட்டு குண்டு வீச்சி[illegible] தனர். [உ-165-5-15]

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

வீட்டுத் தளபாடங்கள், மெத்தைகள், பஞ்சு, தும்பு, ஸ்பொன்ஜ் வகைகள், மெத்தை Box ஸ்பிறிங்குகள் அனைத்தும் நியாயமான மதிப்பீட்டில் கொள்வனவு செய்யப்படும். தொடர்பு: எல்லாநாட்களிலும் 8 மணி—4 மணி வரையும். புதிய இல. 284, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். [வைத்திலிங்கம் & Co. அருகாமையில்] [19385]

## அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

## மாணவர் அகராதி

ஆங்கிலம் படிக்கிறீர்களா? உங்களுக்கு கிடைக்கக்கூடிய மிகச் சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி 'வரதர் மாணவர் அகராதி' ருபா 95/-. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். [சி-1409]

## புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் வெற்றி தருமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய விடை அளிக்கப்படும். ஜாதகம், குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் அனைத்துக்கும் தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர். [19420]

# பாத யாத்திரை

கொழும்பு, ஜன. 22

இலங்கை அரசின் மனித உரிமை மீறல், விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றை எதிர்த்து எதிர்க்கட்சிகளின் கூட்டு முன்னணி, பாதயாத்திரை ஒன்றை ஏற்பாடு செய்து வருகிறது. எதிர்வரும் மார்ச் மாதத்தில் இப்பாத யாத்திரை இடம்பெறும்.

கொழும்பிலிருந்து கதிர்காமம் வரை இடம்பெறவுள்ள இப்பாதயாத்திரையில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக, இதற்கான ஏற்பாடுகளை கவனித்துவரும் பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஸ தெரிவித்தார். [த-10]

---

"A" LEVEL CENTRE

உயர்தராதர கல்வி நிலையம்

பருத்தித்துறை வீதி,
1ம் ஒழுங்கை,
(யாழ். ஆஸ்பத்திரி கிழக்கே)
யாழ்ப்பாணம்.

**சிக்கல் எண்**

ஆரம்பம்:
23—01—1992
Thu. 3-00 — 5-00

ஆசிரியர்:
திரு. கணேசன்
B. Sc. (Hons)

[சி/1405]

---

உ

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி வருடம் தை மாதம் 10 ஆம் நாள் [24-1-1992] வெள்ளிக்கிழமை காலை 9-48 மணி முதல் 10-48 மணி வரை கூடும் மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் திருமாங்கல்யம் பூண இறைவனின் திருவருள் கைகூடியிருப்பதால்,

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திரு. திருமதி க. பொன்னுத்துரை<br>நாகம்மா<br>அவர்களின் சிரேஷ்ட புத்திரன்<br>**கோபாலகிருஷ்ணன்**<br>அவர்களுக்கும் | திரு. திருமதி வே. கிருஷ்ணசாமி<br>அன்னலஷ்சுமி<br>அவர்களின் கனிஷ்ட புத்திரி<br>**நிர்மலாதேவி**<br>அவர்களுக்கும் |

திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயித்து, மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் தாங்களும் குடும்பசமேதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

| (மணமகன் இல்லம்) | (மணமகள் இல்லம்) |
|---|---|
| திரு. திருமதி க. பொன்னுத்துரை,<br>(பத்தர்)<br>திரு. திருமதி க. இராசரெத்தினம்,<br>[பெரிய தந்தை] (பத்தர்).<br>(497) 109/1, காங்கேசன்துறை வீதி,<br>தட்டாதெரு, யாழ்ப்பாணம். | திரு. திருமதி வே. கிருஷ்ணசாமி,<br>(பத்தர்)<br>பாலக்காட்டுச் சந்தி,<br>கரம்பொன் கிழக்கு,<br>ஊர்காவற்றுறை. |

முக்கிய குறிப்பு:

திருமண வைபவம் நடைபெறும் இடம்:
திரு. திருமதி கனகரெத்தினம்,
பிளாங் றோட், சங்கானை.

[19400]

---

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 22

அங்கிலிக்கன் சபை இறைமக்கள் பயிற்சி நிலையத்தின் முதலாவது கருத்தரங்கு எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு பரியோவான் அக்கடமியில் நடைபெற உள்ளது. [இ]

## இமெல்டா தேர்தல் பிரசாரம்

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது பிரசார வேலைகளை திருமதி இமெல்டா மார்க்கோஸ் கடந்த திங்கட்கிழமை ஆரம்பித்தார்.

முன்னாள் ஜனாதிபதியான மறைந்த பேர்டினண்ட் மார்க்கோஸின் மனைவி இமெல்டா ஆவார்.

எதிர்வரும் மே மாதம் பிலிப்பீன்ஸில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவிருக்கிறது. [இ எ]

---

உ

# தர்மசாஸ்தாசஹாயம்

## விவாக சோபன முகூர்த்த அழைப்பு

இடம்: இணுவில் மேற்கு,
ஸ்ரீ கன்னகா பரமேஸ்வரி ஆலயம்,
தர்மசாஸ்தா குருகுலம்.

முகூர்த்தநேரம்: தை மாதம் 9 ஆம் திகதி
23-1-92 வியாழக்கிழமை
பகல் 11 மணி முதல்
12 மணி வரை.

| மணமகன் | மணமகள் |
|---|---|
| சிரஞ்சீவி<br>**பாலசர்வேஸ்வர சர்மாவிற்கும்**<br>(வசந்தன்) | சௌபாக்கியவதி<br>**ஸ்ரீவித்தியாவிற்கும்**<br>(வித்தியா) |

அம்பிகையின் திருவருட்துணை கொண்டு பெரியோர்கள் அனுக்கிரகத்துடனும், நடைபெறும் மேற்படி விவாக சுப முகூர்த்தத்திற்கு உறவினர், நண்பர்கள் எல்லோரும் சமுகந்தந்து நல்லாசி நல்கிச் செல்லுமாறு

★ அன்புடன் அழைக்கின்றோம் ★

தங்களின் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திருமதி நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்,<br>ஆனந்தன் வடலி றோட்,<br>அரியாலை. | சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்,<br>வேதசிவாகம ஆசிரியர்,<br>தர்மசாஸ்தா குருகுலம்,<br>இணுவில். |

[19393]

---

# கீன் கல்வி நிலையம்

திருநெல்வேலி.

## A/L 92

பொருளியல் - எஸ். வரதராஜன்

சனி, ஞாயிறு
8-00 - தேசியவருமானம்
12 00 - சென்மதிநிலுவை

**ஆரம்பம்:- 25 01 92**

★ குறிப்பு: இரண்டு பிரிவுகளுக்கும் ஒரு கட்டணமே அறவிடப்படும்.

[சி-1410]

---

வெளிவந்து விட்டன!

*BRIGHT* இன்

குழந்தைகளுக்கான புதிய சுற்றாடல் கல்வி மதிப்பீட்டுப் பயிற்சிகள்

ஆண்டு — 3 விலை ருபா 22
ஆண்டு — 4 விலை ருபா 25

மொத்தமாகப் பெற விரும்புவோர்;

பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம்.

[19394]

---

## Management In Computer

★ *Basic* ★ *Lotus 1, 2, 3*
★ *d Base* III+ & *Wordstar*

ஆகிய பயிற்சிகளை உள்ளடக்கியது.

● தொழில் புரிவோருக்கு உகந்தது.
● விசேட செய்முறைப் பயிற்சிகளை உள்ளடக்கியது.

**ஆரம்பம்: 25 - 01 - 1992**

விவரங்களுக்கு:

*NORTH CEYLON TECHNICAL INSTITUTE*
14, St. PETER'S LANE, JAFFNA.

[சி-1416]

---

புதிய பிரிவு

# கணக்கியல்

திரு. S. K. பிரபாகரன்

A/L 93: செவ்வாய் - வியாழன்; 3 — 4
A/L 92: செவ்வாய் - வியாழன்; 4 — 5

## யூனிவேர்சல்

கந்தர்மடம் யாழ்ப்பாணம்

[சி/1349]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
13 — 8 — 1933

மறைவு:
22 — 1 — 1991

## திருமதி மகேஸ்வரி குமாரசாமி

[விவாகப் பதிவாளர் - யாழ்ப்பாணம், பிறப்பு, இறப்புப் பதிவாளர் கொக்குவில் - கோண்டாவில்]

அன்பின் தாயே! ஆருயிர் உமையே! தாய்மையின்
சிகரமே!

உங்கள் புவி நடமாட்டம் யாமறியோம்!
மானிட மேந்த இறைவன் அனுப்பி
வினை முடிந்ததும் மன்றல் செய்திட்டாரே
காணாது கலங்குகிறோம். எங்கள் மேல் வைத்த பாசம்
ஓம் சுத்த சிவ சக்தியே!

நல்லாசிரியையே! இயன்ற பதிவாளராக இராச
மகுடம் சூட்டினீரே!

திருமணங்கள் பல செய்து வைக்க
விதம், விதமாய் ஊர்திகளில் பவனி வந்தீரே
நீங்கள் மறைந்தாலும் உங்கள் சொருபம்
உலகெலாம் நிழலாடுதம்மா!

உங்கள் இல் வந்து, அம்மா என்றழைக்கிறார்களே! உங்கள் பிறப்பு, மரணம் பலருக்கும் தெரியாதம்மா! செய்தி கேட்டு திடுமென மரம் போலாகின்றார்கள். நீங்கள் இறையடியில் இருந்தாலும், உங்கள் பிரிவு ஒலி, ஒலி எங்களை வாட்டுதம்மா! என் செய்வோம்!

உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள், உறவினர்கள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

[19101]

---

**O/L** க. பொ. த. [சா. தரம்]
(ஆண்டு—11)

★ பகல் முழு நேர வகுப்புகள்
★ சனி - ஞாயிறு வகுப்புகள்
★ மீட்டல் வகுப்புகள்

**ஆரம்பம்: 25-01-92**
[சனி காலை 7. 45 மணி]

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்

இதை விடத் தெரிவு......... வேறேதும் இல்லை!

[C/1350]

---

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்:
23 — 02 — 1909

மறைவு:
24 — 12 — 1991

திருமதி

## செல்லப்பாக்கியம் சமாரத்தினம்

'எங்களெல்லோரையும் வாழவைத்த அன்புத் தாயின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்'

23-01-1992 அன்று வியாழக்கிழமை நடைபெற உள்ள அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும், வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— குடும்பத்தினர்.

நடராஜா வீதி,
வல்வெட்டித்துறை.

---

## 100 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு:
27 — 04 — 1962

உதிர்வு:
15 — 10 — 1991

தவப் புதல்வி

## ஜெ. சிவகௌரி அம்மன்

நூறு நாள் உருண்டு ஓடிற்றே;
நும் நினைவு எம்மை விட்டே
ஆறு நாள் என்று ஒன்று இல்லை
அன்பினால் பிணைத்த நெஞ்சம்
தேறு நாள் திரும்ப வந்து
சேரும் எந்நாளோ அம்மா!
ஆறுவீர் அரன் அடிக்கீழ்
அஞ்சலி பிரார்த்திக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும் இதயங்கள்:
- றியோ குடும்பத்தினர்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

[19425]

## உதயன்

### துணிச்சல் வருமா?

மக்களுக்கு அரசியல் சுதந்திரம் வழங்கி, இலவசக் கல்வித் திட்டத்தை மேலும் அர்த்தபுஷ்டியுள்ளதாக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. சுதந்திர தார்மிக சமுதாயம் ஒன்றை உருவாக்கவும் நாம் எண்ணியுள்ளோம்.

இலவச பாடநூல் விநியோகத்தை வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில், ஜனாதிபதி பிரேமதாசா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

சிங்கள மக்களுக்கு மேலும் பல அரசியல் சுதந்திரங்களை வழங்குவது குறித்தும், அவர்களைத் தார்மிக சமுதாயமாக மாற்றுவது குறித்துமே பிரேமதாசா பிரஸ்தாபித்திருக்கிறார் என்பது அவரின் பேச்சின் தொனியாகும்.

ஏற்கனவே பலவகையான அரசியல் சுதந்திரங்களைத் தாராளமாக அனுபவித்து வரும் சிங்கள மக்களுக்கு, மேலும் அரசியல் சுதந்திரங்களை வழங்குவதற்கு முந்திக்கொள்கிறார் பிரேமதாசா. ஆனால் அரசியல் சுதந்திரம் இல்லாமல், அதற்காகப் போராடி வரும் தமிழ் மக்களின் விவகாரத்தை அக்கறையுடன் கவனிக்காமல் இருக்கிறார்.

தமிழர்களின் ஆட்சி உரிமை உட்பட்ட அரசியல் உரிமைகளை வழங்காது வெறும் பேச்சுடன் காலங்கடத்துகிறார். கலந்தாலோசனை, கருத்தொற்றுமை, நல்லிணக்கம் என்ற மூன்று சொல் மந்திரத்தை உச்சரித்துக் காலம் கடத்தி வருகிறார்.

அதுமட்டுமன்றி இராணுவ பலத்தைப் பயன்படுத்தித் தமிழர்களை அழித்தும், அடக்கி ஆண்டும் வருகிறார்.

சிங்களவர்களுக்கு மேலும் அரசியல் சுதந்திரங்களை ஈட்டித் தருவதாகக் கூறும் அவர், நீதியும், நியாயமும் மிளிரும் தார்மிக சமுதாயத்தை உருவாக்குவதற்கு உண்மையாகவே விரும்பினால், தமிழர்களின் அரசியல் சுதந்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பார்.

அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்று மூன்று வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. ஆயினும் தமிழர்களின் அரசியல் சுதந்திரங்களை வழங்குவதில் ஓர் அடி தானும் முன்னுக்கு எடுத்து வைக்கவில்லை. அதற்குப் பதில் தமிழர்களின் வாழ்க்கை நிலையை பல படிகள் கீழே தள்ளிவிட்டு அவர்களை துன்புறுத்துகிறார்; அவலப்படவைக்கிறார்; அவஸ்தைப்படச் செய்கிறார்.

தமிழர்களுக்கு அரசியல் உரிமைகளை வழங்கவேண்டும் என்ற உணர்வு அவர் மனதில் இருக்குமானால், அமைச்சர் தொண்டமானின் திட்டத்தையாவது ஏற்று நடைமுறைப்படுத்தும் துணிவு அவருக்கு வந்திருக்கும். ஆனால் அதனைக் கடைக்கண்ணால் தானும் பார்க்காதவராக அல்லவா அவர் தம்மைக் காட்டிக் கொண்டிருக்கிறார்!

இதில் மேலும் வேடிக்கை என்னவெனில், தமிழர்களுக்கு இழைத்த அநீதிகளே நாட்டின் இன்றைய நிலைக்குக் காரணம் என்று முந்திய தலைவர்கள் மீது குற்றம் சுமத்துகிறார். அதே குற்றத்தை தாமாவது செய்யாமல், தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப் போக்கி அவர்களின் உரிமைகளை வழங்குவதற்கு மனம் கொள்கிறாரில்லை. அதற்குப் பதிலாக தாமும் அதே குற்றத்தையே செய்துகொண்டிருக்கிறார்.

ஒரு தார்மிக சமுதாயத்தைக் கட்டி எழுப்ப விழையும் தலைவன், மற்றவர்கள் மீது குற்றம் சுமத்துவதைத் தவிர்த்து, தான் குற்றம் செய்யாமல் இருக்கவேண்டும்.

அந்த நன்னெறி வழி நின்று தமிழர்களின் அரசியல் உரிமைகளை நீதியாகவும், நியாயமாகவும் வழங்குவதற்கான துணிச்சலை திரு. பிரேமதாசா வரவழைத்துக் கொள்வாரா?

சிங்கள மக்கள் மத்தியில் மனமாற்றம் ஏற்பட்டுவரும் இச்சந்தர்ப்பத்தை அவர் தவறவிட்டால், அவர் தார்மிக சமுதாயத்தை உருவாக்குவதற்குப் பதிலாக, நாட்டையே குட்டிச்சுவராக்கி அது சிதறுண்டு போக மட்டுமே வழிசெய்தவராவார். இதனை அவர் உணர்வது எப்போது?

# இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

# மக்கள் உணர்வில் அது தெரிகிறது

## கொழும்பு பல்கலைக்கழக கல்விமான்கள் அறிக்கை விபரம்

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பதினொரு பேர் சேர்ந்து அறிக்கை ஒன்றை விடுத்திருந்தனர்.

அந்த அறிக்கையின் சாராம்சம் 20-1-1992 ஆம் திகதி உதயனில் முன் பக்கத் தலைப்புச் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது.

பல்கலைக்கழகக் கல்விமான்களின் அறிக்கையை இங்கே முழுமையாக வெளியிடுகின்றோம்:

இன மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசியல் ரீதியான மாற்றுவழி குறித்து இப்போது ஆராயப்பட்டு வருகிறது.

இந்த நேரத்தில் —

தற்போது இடம் பெற்று வரும் அரசியல் விவாதத்தில் தீவிர தேசிய உணர்வு, சகிப்பற்ற தன்மை மற்றும் இராணுவ ரீதியில் கொண்டுள்ள நம்பிக்கை ஆகியன தென்படுவது குறித்து நாம் மிகவும் குழப்பமடைந்துள்ளோம்.

இன்றைய அரசியல் விவாதத்தில் கலந்து கொண்டுள்ள தலைவர்களும் மற்றும் பேச்சாளர்களும் பொதுமக்களின் உணர்வுகளுடன் கூடுதல் தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும் என்று நாம் உணர்கின்றோம்.

### மக்களின் உணர்வுகள்

ஏற்பட்டு வரும் மாற்றங்களை உயர்நிலைச் சமூகத்தினர் அறிந்து கொள்ளும் தன்மைக்கு முரணாகவே பொதுமக்களின் உணர்வுகள் உள்ளன.

இனமோதலுக்கு அரசியல் தீர்வு மூலம் முடிவு காண வேண்டும் என்பது குறித்து கூடுதல் சகிப்புத் தன்மையும், விருப்பும் பொதுமக்களது உணர்வுகளில் தென்படுகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்குச் சமர்ப்பிக்கப்படும் எந்த யோசனையும் விஷயமறிந்த முறையிலான, நன்கு ஆராயப்படக்கூடிய விதத்திலான பொதுவிவாதம் மற்றும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவை ஏற்படுகிறது.

### சந்தேகத்துடன் நோக்குதல்

இப்பிரச்சினையின் தீவிரத் தன்மையை நோக்குமிடத்து, சில இனங்களைச் சேர்ந்த மக்கள், காலத்திற்குக்காலம் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணச் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் நிறைவேற்றப்படக்கூடியதா என்பதை சந்தேகத்துடன் நோக்கி வந்தனர் என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆகவே, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எந்த யோசனையும், உணர்ச்சிகளுக்கு இடங்கொடுக்காத முறையில் பகிரங்கமாக ஆரோக்கியமான அரசியல் நடைமுறை ஒன்றின் கீழ் விஷயாலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்.

அந்த நடைமுறை, யுத்தத்தினால் சீரழிந்துள்ள இந்த நாட்டில் இன உறவுகளை ஜனநாயக ரீதியில் வளர்க்கக் கூடிய சமாதானச் சூழலை மீண்டும் ஏற்படுத்துவதில் முடிவடைய வேண்டும்.

சகல இன மக்களும் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்த அரசியல் தீர்வு ஒன்றை சில தேசியவாத மற்றும் சமயத் தலைவர்கள் ஏற்க மறுக்கும் தன்மை கொண்டதாக தற்போதைய பிரச்சினை இருக்கிறது.

### இராணுவத் தீர்வா?

யுத்தத்திற்கு மாற்றாக அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவது இலங்கை நாட்டை சிதறுண்டு போகச் செய்வதில் தான் முடியும் என்ற ஊகத்தின் அடிப்படையில், இராணுவத் தீர்வு ஒன்றையே இப்பிரச்சினைக்குக் காணவேண்டும் என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

திரு. தொண்டமானின் சமரச முயற்சியில் உள்ள நன்மை, தீமைகள் எப்படி இருப்பினும், பேச்சுவார்த்தை நடத்தி, அதன் மூலம் காணப்படும் அரசியல் தீர்வின் செல்லுபடியாகும் தன்மையை முற்றாக நிராகரிப்பது சகல சமூகத்தினருக்கும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று நாம் நம்புகின்றோம்.

இது குறித்து சில சமயம் மற்றும் தேசியத் தலைவர்கள் ஏற்கனவே எச்சரிக்கையும் செய்துள்ளனர்.

### சிதறுண்டு போகும்

நின்று பிடிக்கக்கூடிய ஜனநாயக ரீதியிலான அரசியல் மாற்று வழிகளைக் கண்டுபிடிக்காது இனப்பிரச்சினை தீவிரமடைய அனுமதிக்கப்படின், மீண்டும் ஒரு நாடாகக் கட்டியெழுப்ப முடியாதபடி எமதுநாடு பிரதேசவாரியாக சிதறுண்டு போகும்.

இதற்கு எமது கடந்த கால அனுபவங்களும் மற்றும் அண்மைக் காலத்தில் சர்வதேச ரீதியில் - குறிப்பாக சோவியத் யூனியன் மற்றும் யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற சம்பவங்களும் சாட்சியங்களாக அமைந்துள்ளன.

யுத்தத்திற்கு மாற்றுவழியாக அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சிக்கு இன்னும் காலம் பிந்திவிடவில்லை.

எனினும் —

சகல இனங்களினதும் ஜனநாயக அரசியல் அபிலாஷைகளுக்கு இடம்கொடுக்கும் வாய்ப்பையும், சட்டபூர்வ உரிமையையும், [கடந்த காலத்தில் செய்தது போன்றும், இப்போது செய்துவருவது போன்றும்] தேசியத் தலைவர்கள் தொடர்ந்தும் மறுத்து வந்தால், ஒரு முழுமையான அரசியல் அமைப்பாக இலங்கை என்ற நாடு இருக்குமா என்பது சந்தேகமே.

உண்மையான அதிகாரப் பரவலாக்கல் அல்லது சமஷ்டி அரசமைப்பு முறையின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு ஜனநாயக அரசியல் தீர்வு ஒன்றை காலதாமதம் இன்றி காணும்படி அரசாங்கத்திற்கும் எதிரணியில் உள்ள அரசியல் கட்சிகளுக்கும் நாம் விண்ணப்பித்துக் கொள்கின்றோம்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதன் தேவை குறித்து கருத்துடன்பாடு ஒன்று காணுவதற்கான அரசியல் முன் முயற்சிகளை உடனடியாக அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் எடுக்க வேண்டும்.

அப்போது தான் சகல இனங்களையும் சேர்ந்த மக்கள் மத்தியில் நம்பிக்கை உணர்வைக் கட்டியெழுப்பவும் அனைத்து தேசியவாத தீவிர சக்திகளை அரசியல் ரீதியில் தனிமைப்படுத்தவும் முடியும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்ற கொள்கைக்கு ஆதரவாக செயற்படும்படி நாம் விண்ணப்பித்துக் கொள்கின்றோம்.

(அ-எ)

### நெடுந்தீவில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெடுந்தீவுக்குச் செல்ல முடியாமல் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் தங்கியிருந்த 117 பேரை, ஏற்றிக்கொண்டு பருத்தித்துறையிலிருந்து புறப்படுச் சென்ற 'குமண' கப்பல் அவர்களை நெடுந்தீவில் இறக்கிவிட்டு அங்கிருந்து சுமார் 30 பேருடன் இன்று பருத்தித்துறையை வந்தடையும்.

இதேசமயம் —

ஏனைய தீவுகளில் சிக்கியிருக்கும் பொதுமக்களைச் சந்தித்து அவர்களின் நிலையைக் கண்டறிவதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் குழு ஒன்று எதிர்வரும் 25 ஆம் திகதியளவில் பருத்தித்துறையிலிருந்து கப்பலில் புறப்பட்டுச் செல்லவிருக்கிறது.

இந்தக் குழுவினர் ஒரு வாரம் தீவுப்பகுதிகளில் தங்கி நின்று அங்குள்ள நிலைமைகளைக் கண்டறிவர் என்று அறியவருகிறது. (உ-5)

### கருணாநிதி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படுகிறது.

அண்மையில் திருச்சியில் சயனைட் உட்கொண்டு மரணமான பெரிய சாந்தனை புலனாய்வுக் குழுவினர் பிடிப்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியின் போது அங்கு கைதான வாசுகி என்ற பெண் ஜோர்ஜின் மனைவி என்றும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் —

அண்மையில் கைது செய்யப்பட்ட - தமிழக முன்னாள் அமைச்சர் - சுப்புலட்சுமி ஜெகதீசன் தன் சகோதரியான உத்தமியின் பேரில் விடுதலைப் புலிகளுக்கு சீருடைகளைத் தயாரிக்கும் ''மினாமி'' நிறுவனம் ஒன்றை நடத்தியதாக மற்றொரு தகவல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இதேசமயம், சென்னை துறைமுக ''டிரஸ்ட்'' தலைவர் ஏ. பால்ராஜும் கண்காணிக்கப்பட்டு வருகிறாராம். அவரது விருந்தினர் மாளிகையில் தான் முன்னாள் முதல்வர் கருணாநிதி விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்ததாகக் கூறப்படுகிறது. [உ]

## கொழும்பு சென்ற பெண் கால்களை இழந்து வந்தார்!

### யாழ். வாசிக்கு ஏற்பட்ட அவலம்!!

யாழ்ப்பாணம், ஜன. 22

தனது ஒரே சகோதரனை வெளிநாடு அனுப்புவதற்காக கடன்பட்டு கொழும்பு புறப்பட்ட விதவைப் பெண் ஒருவர் இரு கால்களையும் இழந்த நிலையில் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

தெல்லிப்பளை கிழக்கு செருக்கப்புலத்தைச் சேர்ந்தவர் சின்னத்தம்பி இரத்தினம் [வயது 33].

இவரது கணவர் 1987இல் இந்திய இராணுவம் நடத்திய ஷெல் தாக்குதலினால் மரணமாகி இருந்தார். இரு பெண் பிள்ளைகள், வயதான பெற்றோர் உழைப்பற்ற சகோதரன் ஆகியோருடன் வாழ்ந்து வந்த இவர் தனது சகோதரனை வெளிநாட்டுக்கு அனுப்பும் நோக்கத்துடன் கடந்த நவம்பர் 3ஆம் திகதி சகோதரனுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றார்.

வவுனியாவில் அவசரமாக ரயிலில் ஏறமுற்பட்ட போது கீழே விழுந்து இவரது இரு கால்களும் ரயில் சில்லுக்குள் அகப்பட்டுத் துண்டிக்கப்பட்டன.

முதலில் வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்ட அவர் அங்கிருந்து அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கும் பின்னர் கொழும்பு ஆஸ்பத்திரிக்கும் கொண்டு செல்லப்பட்டார்.

கொழும்பில் 20 தினங்கள் சிகிச்சை பெற்ற பின்னர் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு மீண்டும் அனுப்பப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு அனுப்பப்பட்டு செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் உதவியுடன் சனிக்கிழமை யாழ். போதனா வைத்திய சாலையை வந்தடைந்தார்.

வெளிநாடு செல்வதற்காகப் புறப்பட்ட இவரது சகோதரருக்கும் பயணம் தடைப்பட்டுவிட்டது. (இ-15)

### சீனக்குடா.

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டு வரப்பட்டனர்.

இந்தக் குண்டுவெடிப்பு தற்செயலாக நடந்த விபத்து என்று தோன்றுவதாக ஸ்ரீலங்கா அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று இந்திய வானொலி அறிவித்தது.

''அரச வட்டாரங்கள் இதனைத் தற்செயலாக இடம்பெற்ற விபத்து என்று கூறுகின்றன. ஆயுதக் குதம் இருக்குமிடத்தில் இவ் வெடி விபத்து ஏற்பட்டது.

முதலாவது குண்டு வெடித்ததும் அங்கிருந்த ஏனைய குண்டுகள் தொடர்ச்சியாக வெடித்தன.

இவ்வெடிவிபத்து ஒரு சதிச்செயல் என்று கூறப்பட்டாலும் அதனை ஏற்றுக்கொள்ளக்கூடிய [illegible] கிறது.'' [illegible] தெரிவித்தது. [அ-எ-த]

### புதையல் தேடிய அதிரடிப்படை வீரர்

புராதன புதையல் ஒன்றைத் தோண்டி எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரண்டு விசேட அதிரடிப் பொலீஸ் படை வீரர்கள் உட்பட 9 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

எம்பிலிபிட்டியப் பகுதியிலுள்ள அரசுக்குச் சொந்தமான காணியில் இப் புதையல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. 50 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள புராதனப் பொருள்கள் இதில் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. புதையலை எடுப்பதற்காக கொழும்பிலிருந்து ஏராளமான [illegible] தனராம். (த-10)

### இப்படியும் ஒரு நஷ்ட ஈட்டுக் கோரிக்கை

லண்டன், ஜன. 22

தனது கோழிப் பண்ணைக்கு மேலாக பறந்து பிரிட்டிஷ் விமானப்படை விமானங்கள் பயிற்சியில் ஈடுபட்டதால் தனது கோழிகள் ஒழுங்கற்ற வடிவில் முட்டைகளை இட்டன எனக்கூறி பண்ணை உரிமையாளர் ஒருவர் நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இங்கிலாந்தில் விற்றில் ளிகடன் என்ற இடத்தில் இது நடந்துள்ளது.

தன்னிடமுள்ள 5 ஆயிரம் கோழிகளில் ஆயிரத்து ஐந்நூறு கோழிகள் ஒழுங்கற்ற வடிவில் முட்டைகளை இட்டன என்றும் ஒரு முட்டை வாழைப்பழ வடிவில் காணப்பட்டதாகவும் அந்தப் பண்ணை உரிமையாளரான வில்லியம் பிரெலின் தெரிவித்துள்ளார். (த-5)

### விவேகானந்தர் ஜயந்தி விழா

யாழ்ப்பாணம், ஜன. 22

சுவாமி விவேகானந்தரின் 129 ஆவது ஜயந்தி விழா எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு திருநெல்வேலி ராமகிருஷ்ணாலயத்தில் நடைபெறும். [இ]

### நேரடித் தொலைபேசி

கொழும்பு, ஜன. 22

பேசாலை மற்றும் தலைமன்னார் பகுதிகளுக்கு நேரடித் தொலைபேசி வசதி எதிர்வரும் மார்ச் மாதமளவில் செய்து கொடுக்கப்படவிருப்பதாக கொழும்புப் பத்திரிகை செய்தி ஒன்று தெரிவிக்கிறது. [த-எ]

### குண்டு வெடிப்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திருகோணமலை வந்து சேரவிருக்கும் வேளையில், அங்கு நேற்று இரண்டு பெரிய தாக்குதல்கள் நடந்திருப்பது அவதானிகள் மத்தியில் பல கேள்விகளையும், விமர்சனங்களையும் தோற்றுவித்துள்ளது. [அ-எ]

### கிழக்கில் நிலைமை இப்போது கேள்விக்குறி!

ஹம்பேர்க், ஜன. 22

கிழக்கு மாகாணத்தின் அதிகமான பகுதிகளில் வழமை நிலைமை திரும்பிவிட்டது என்று இலங்கை அரசு கூறுவதை மறுப்பது போன்று விடுதலைப் புலிகளின் நேற்றைய தாக்குதல்கள் அமைந்துள்ளன.

இவ்வாறு நெதர்லாந்து வானொலி தெரிவித்தது.

திருகோணமலையில் நேற்று நடந்த குண்டு வெடிப்பு, அதிரடித் தாக்குதல் குறித்து நெதர்லாந்து வானொலி தனது கொழும்புச் செய்தியாளர் நிற்றா செபஸ்தியானுடன் பேட்டி ஒன்றை நடத்தியது.

அப்போதே மேற்கண்ட மதிப்பீடு வெளியிடப்பட்டது.

பேட்டி விவரம் வருமாறு:-

கேள்வி: திருமலையில் நேற்று இடம் பெற்ற இரண்டு சம்பவங்கள் மூலம் இந்தியாவிலிருந்து இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்புவது தொடரக் கூடாது என்று விடுதலைப் புலிகள் எச்சரிக்கை செய்துள்ளனரா?

நிற்றா: கிழக்கு மாகாணத்தின் பெரும் பகுதிகளில் சகஜ நிலை திரும்பி விட்டது என்று இலங்கை அரசு கூறுவதை மறுப்பது போன்று விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

கேள்வி: தமிழகத்திலிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்புவதற்குரிய சூழ்நிலை இல்லை என்றும், அதனால் தாயகம் திரும்பும் அகதிகளுக்கு பாதுகாப்பு இல்லை என்று கூறியும் இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இத்தாக்குதல்களைத் தொடர்ந்து கிழக்கில் விடுதலைப் புலிகள் மீது இராணுவம் கடும் நடவடிக்கை எடுக்குமா?

நிற்றா: அவ்வளவு இலகுவில் அந்த நடவடிக்கை எடுக்க முடியாது. இப்போது விடுதலைப் புலிகளுடன் பிரதான யுத்தத்தை வடபகுதியில்தான் இராணுவம் நடத்த வேண்டியுள்ளது. [அ-எ]

### அன்ரன் பாலசிங்கம் இன்று கருத்துரை

''இன்றைய அரசியல் நெருக்கடியும் தமிழீழ விடுதலைப் புலிகளும்'' என்ற தலைப்பில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இன்று கருத்துரை வழங்குவார்.

இந்நிகழ்ச்சி இன்று மாலை 5 மணிக்கு குருநகர் புனித கார்மேல் மாதா பொதுமண்டபத்தில் நடைபெறும். கடற்புலிகளின் வரவேற்புக் குழு இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. [உ-51]

### நாளை மறுதினம் தபால் பொதிகள் வரும்

யாழ்ப்பாணம், ஜன. 22

கொழும்பிலிருந்து புறப்பட்டு தற்போது திருகோணமலையில் தரித்து நிற்கும் 'குமாரி' கப்பல் நாளை மறுதினமே பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் எனத் தெரிய வருகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் தபால் பொதிகளும் அதில் எடுத்து வரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (உ-5)

### நேர்முகப் பரீட்சை

யாழ். போதனா ஆஸ்பத்திரியில் ஆண், பெண் சுகாதார சுத்திகரிப்பு (அமைய) தொழிலாளர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை 23 ஆம் திகதியும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கான அறிவித்தல் கடிதங்கள் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. நாளை ஆண்களுக்கும் நாளை மறுதினம் பெண்களுக்கும் நேர்முகப்பரீட்சை நடைபெறும். [த-15]

### மாதாந்த உதவிப்பணம்

தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வசதி குறைந்தவர்களுக்குரிய நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான மாதாந்த உதவிப் பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

### ஜொலி ஸ்ரார்ஸ் வெற்றி!

யாழ்ப்பாணம், ஜன. 22

அமரர்கள் ராஜன், விக்ரம் ஆகியோர் நினைவாக கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையேயான முத்தரப்பு கிரிக்கெட் போட்டியின் முதல் இரு ஆட்டங்களிலும் யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் அணி வெற்றியீட்டியது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தச் சுற்றுப் போட்டியின் முதல் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சன சமூக நிலைய அணியையும், இரண்டாவது ஆட்டத்தில் ஷப்றா அணியையும் ஜொலி ஸ்ரார்ஸ் அணி வென்றது. கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த ஆட்டங்கள் நடைபெற்றன.

எதிர்வரும் சனிக்கிழமை கொக்குவில் மத்திய சன சமூக நிலைய அணியை எதிர்த்து ஷப்றா அணி மோதும். இந்த ஆட்டத்தில் வெற்றியீட்டும் அணி ஜொலி ஸ்ரார்ஸ் அணியுடன் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை இறுதிப் போட்டியில் மோதும். இவ்விரு ஆட்டங்களும் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். [உ]

### போர்க் காலக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 22

வலிகாமம் வடக்குக் கடற்தொழில் சங்கங்களின் ஒன்றியத்தின் ஆதரவுடன் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் நடத்தும் போர்க்காலக் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி இன்று காலை 10 மணிக்கு கருத்தரங்கு நடைபெறமாட்டாது என்றும் அறிவிக்கப்படுகிறது. [த]

## மற்றும் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 22

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வந்தவரான ரவி என்பவர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

இலங்கைப் பொலீஸார் அவரை விசாரித்து வருவதாகவும் அச் செய்தி மேலும் தெரிவிக்கிறது. (த)

# SPECIAL ENGLISH CLASSES

## அடுத்த பிரிவுகள் ஆரம்பம்

● ஒருவரின் தராதரத்திற்கு ஏற்றபடி தனிப்பட்ட முறையில்

★ BASIC ENGLISH [ஆரம்பகாரருக்கு]
★ GENERAL ENGLISH
★ SPOKEN ENGLISH (Practice)
★ ADVANCED ENGLISH
★ TOEFL (Workshop Classes)
★ N. C. E. DIPLOMA COURSE
★ TEACHERS SELECTION EXAM

## COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

● [விளக்கங்கள் தமிழில்] ●

★ றேடியோ. ரி. வி., வீடியோ டெக் திருத்துதல்
★ றிவைண்டிங்

*JAFFNA TECHNICAL INSTITUTE,*
பலாலி றோட்,
(தபால்பெட்டிச் சந்திக்கு அருகாமையில்)
இல. 4, பிள்ளையார் லேன்,
திருநெல்வேலி.

[19424]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் பொருட்கள் பின்வரும் திகதிகளில் ஏலத்தில் விற்கப்படும்.

இடம்: **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**
திகதி: 29-01-1992
நேரம்; **காலை 10 மணி**

1. பொருள்கள்:

வாளி - 01
கதிரை - 03
மின்சார கேத்தல் - 05
கண்ணாடி - 01
புற்பாய் - 43
அலுவலக கோவைத் தட்டு - 01
துவிச்சக்கரவண்டி - 01
படப் பிரதி பண்ணும் இயந்திரம் - 01
பூட்டு - 01
தண்ணீர் வடி கட்டி - 01
கணக்கு கூட்டும் இயந்திரம் - 09
கிளிப்படிக்கும் இயந்திரம் - 02
மணிக்கூடு - 04
வாளி - 02
இரும்புப் பெட்டி - 01
மர றாக்கை - 01
மேசை - 02
பற்றுச் சீட்டு இயந்திரம் - 01
பனைஓலை[வெட்டி எடுக்கப்படல் வேண்டும்] மரம் - 06
தறித்த கோணல் புளியமரம் - 01

இடம்: **இராமநாதன் நுண்கலைக் கல்லூரி. மருதனாமடம்.**
திகதி: 01-02-1992
நேரம்: **காலை 10 மணி**

2. பொருள்கள்:

தறிக்காத தென்னைமரம் - 02
தறிக்காத வேப்பமரம் - 01
தறிக்காத புளியமரம் - 01
தறிக்காத மாமரம் - 01
தறித்த கோணல் புளியமரம் - 01
பனை ஓலை - 32 மரங்கள்
(வெட்டி எடுக்கப்படல் வேண்டும்)

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருட்களுக்கான முழுப் பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அப் பொருள்கள் அனைத்தையும் அன்று மாலை 4 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்தல் வேண்டும் தறிக்கப்படாத மரங்கள், பனை ஓலைகள் மட்டும் ஒரு வாரத்தில் அப்புறப்படுத்தப்படல் வேண்டும்.

மேற்படி பொருள்களை 28 ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கம் 4 மணி வரை திருநெல்வேலியிலும், 30 ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கம் 4 மணி வரை மருதனாமடத்திலும் பல்கலைக்கழக நிதியாளரை தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

**— பதிவாளர்.**

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
20-01-1992.

(சி/1352)

## பலாலி முகாம் வந்த சமயம்

# மல்வத்தை நாயக்க தேரர் புலிகளை நோட்டமிட்டார்!

கொழும்பு, ஜன. 22

மல்வத்தை மகா நாயக்க தேரர் வண. ரம்புக்வெல விபாஸி தமது வடபகுதி விஜயத்தின் போது இராணுவ பதுங்கு குழி ஒன்றினுள் இருந்து விடுதலைப் புலிகளின் நிலை ஒன்றை 'பைனோக்குலர்' உதவியுடன் பார்த்தாராம்.

பலாலியில் இச் சம்பவம் இடம் பெற்றதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று படத்துடன் செய்தி வெளியிட்டுள்ளது.

பதுங்கு குழியில் இருந்து வெளியே வந்த மகாநாயக்க தேரர், அருகில் நின்ற மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவிடம் —

'எமது சிப்பாய்கள் நாட்டையும் தேசத்தையும் காப்பாற்ற இவ்வளவு கஷ்டப்பட வேண்டியுள்ளது'— என்று கூறினார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம், தமது வடபகுதி விஜயம் குறித்து மல்வத்தை மகா நாயக்கதேரர் அரசாங்கத்துக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்கவிருக்கின்றார்.

அஸ்கிரிய பீட சங்கத்தினருடன் கலந்தாலோசனை நடத்திய பின்னரே அந்த அறிக்கை தயாரிக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. [ஒ-ஏ]

## குச்சவெளி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தியது.

இத் தாக்குதலை அடுத்து அந்த இராணுவ அணி தனது முயற்சியை கைவிட்டு முகாம் திரும்பியது என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-த]

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1992-1-31 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

**பதவிகள்:**

பகுதி நேரப் போதனா ஆசிரியர்—

உதைபந்தாட்டம்/வலைகோற் பந்தாட்டம் [ஹொக்கி] / கூடைப் பந்தாட்டம் / மேடைவரிப் பந்தாட்டம் [ரேபிள் ரெனிஸ்]/ பூப்பந்தாட்டம் [பட்மின்ரன்] / உடற்பயிற்சி விளையாட்டுக்கள் / தசைகளை வலுப்படுத்தும் உடற்பயிற்சிகள் [ஜிம்னாஸ்ரிக்ஸ்].

**கொடுப்பனவு விகிதம்:**

மணித்தியாலத்திற்கு ரூபா 75/- [மாதத்திற்கு 900/- உச்ச அளவு].

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விவரங்களையும் இப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பங்களைப் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுக்கான வேண்டுகோளுடன் 23 x 10 ச.மீட்டர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட தபால் உறை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-1-[illegible]

## யோசனைகளை வெளியிடுவதை தடுக்கும் அதிகாரம் இல்லையாம்!

கொழும்பு, ஜன. 22

தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளை, குழுவின் உறுப்பினர்கள் பகிரங்கப்படுத்துவதைத் தடுக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என்று குழுத் தலைவர் திரு. மங்கள முனசிங்கா தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்குத் தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஆனால் — இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் குறித்து பகிரங்க விவாதம் நடத்த முடியாது.

தெரிவுக் குழுவும் நாடாளுமன்றச் சிறப்புரிமையை அனுபவிக்கிறது. அதனாலேயே இந்தக் கட்டுப்பாடு—எனவும் திரு. மங்கள முனசிங்கா சொன்னார். [அ-எ]

அரசாங்க

# எழுதுவினைஞர் பரீட்சை

பெப்ரவரியில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

## துரித பயிற்சி வகுப்புகள்

**10 தினங்கள் மட்டும்.**

★ நாளாந்தம் 3 மணித்தியாலங்கள்
★ அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ நாளாந்தக் கட்டணம் ரூபா 20 மட்டுமே

**ஆரம்பம்: 25-01-1992**
முற்பகல் **10-30**

பாடநெறி:- மொழித்தேர்ச்சி, உளச்சார்பு.

**போட்டியில் வெற்றி பெற ஓர் அரிய சந்தர்ப்பம்!**

# அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

**101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)

[சி-1412]

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

## பேராசிரியர் சு. வித்தியானந்தன்

(முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

தாயின் மடியில் :
**08 — 05 — 1924**

இறைவனடியில் :
**22 — 01 — 1989**



தெய்வத் தமிழ்வடிவே செந்தமிழின் காவலனே
பொய்யில் தமிழாய்ந்த பொக்கிஷமே — துய்யபுகழ்
எங்கள் குலவிளக்கே யாவுமாய் நின்றவரே
உங்கள் பிரிவாற்றா துணர்.

**பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.**

'தமிழகம்',
தெல்லிப்பளை.

[சி/1351]

## மரண அறிவித்தல்

## தம்பு சரவணமுத்து

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த தம்பு சரவணமுத்து [பிரபல வர்த்தகர், வியாங்கொட, திவிலப்பிட்டிய] நேற்று [21-01-92] காலமானார்.

இவர் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், கனகசபை [கணக்காளர், அவுஸ்திரேலியா], சண்முகநாதன் [வத்தளை], இராசரெத்தினம், இராசலெட்சுமி, நகுலேஸ்வரி ஆகியோரின் தகப்பனாரும், சிவகாமசுந்தரி [காலஞ் சென்றவர்], சிவபாக்கியம், மாலினிதேவி, தனபாலசிங்கம் [ஜேர்மனி], நவோதயம் [முதலியார், நீதிமன்றம் -மட்டக்களப்பு] ஆகியோரின் மாமனாரும், சேரன், இளங்கோ, சாந்தினி [B. Com., அவுஸ்திரேலியா], சுரேந்திரன் [B. Sc.], சண்முகப்பிரபா, பிரமிளா, றஜித்தா, சுபோதினி, சிவப்பிரியா, சிவரஞ்சன், சிவசக்தி, ஜெயகௌரி, மோகனகௌரி, ஜீவன் ஆகியோரின் பேரனும், மாதுரியின் பூட்டனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக அவரின் இல்லத்திலிருந்து நீர்வேலி மயானத்திற்கு இன்று [22-01-92] காலை 10-00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ச. இராசரெத்தினம்**
[மகன்]

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

[19429]

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு!

கொழும்பு சென்று சிகிச்சை பெறுவதற்காக யாழ். போதனா வைத்தியசாலையில் பதிவு செய்த நோயாளர்களை, இன்று புதன் கிழமை காலை 8 மணிக்கு வைத்தியசாலையில் சமூகமளிக்கும்படி, வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [த-15]

## அறிவியல் கருத்தரங்குகள்

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினர், பாடசாலை மாணவர்களுக்காக நடத்தி வரும் அறிவியல் கருத்தரங்குகள், இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பின்வரும் 3 பாடசாலைகளில் நடைபெறும்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி— ''பேணப்பட வேண்டிய தமிழர் பண்பாட்டுக் கோலங்கள்'' — புதுவை இரத்தினதுரை (பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம்)

இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடம் — ''மத்திய கிழக்கில் நடப்பது என்ன?'' — திரு. மு. திருநாவுக்கரசு.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி — ''பிரபஞ்சத்தின் அமைப்பு, சூரியக் குடும்பம்'' — திரு. எஸ். ரி. பி. இராஜேஸ்வரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) [த]

## மீனவர்களை நோக்கி வேட்டுக்கள்!

பூநகரி, பூவரசந்தீவு இராணுவத்தினர் நேற்று அதிகாலை மீனவர்களை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர் என்று அங்கிருந்து தப்பி வந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

சிறு வள்ளம் ஒன்றில் இறால் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீதே பூவரசந்தீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் சுட்டனர்.

மீனவர்கள் கடலில் பாய்ந்து உயிர் தப்பிக் கொண்டனர். [ஒ-51]

## மரண அறிவித்தல்கள்

## குருசுமுத்து கந்தசாமி

மயிலிட்டிக் கரையை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது குருநகரில் வசித்தவருமாகிய குருசுமுத்து கந்தசாமி காலமானார்.

இவர் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி சின்னையா நாகரத்தினத்தின் அன்புச் சகோதரரும், திருமதி ரேவதி ஜெகநாதனின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் குருநகர் 30, பாக் றோட் இல்லத்திலிருந்து 22-1-92 பிற்பகல் 3 மணிக்கு நல்லடக்கத்திற்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;
**சின்னையா தவரட்ணம்**
(மருமகன்)

[19430]

## சவிரிமுதது அந்தோனிப்பிள்ளை

(வசாவிளான்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசாவிளானை வசிப்பிடமாகவும் கொண்டு, தற்போது சூராவத்தையில் வசித்தவருமாகிய சவிரிமுத்து அந்தோனிப்பிள்ளை 21-01-1992 செவ்வாய்க் கிழமை காலமானார்.

இவர் இராசம்மாவின் அன்புக்கணவரும், ஆனந்தராசா (சேவயர், ஓமான்), இரத்தினம்மா, காலஞ்சென்ற மாகிறேற், மாசிலாமணி (ஆசிரியர்), பத்திநாயகி, உத்தரியநாயகி, தருமராசா, பிலிப் பத்மராசா (சுவிஸ்), மகிமைநாயகி, காலஞ்சென்ற றோசா புஸ்பமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மிக்கேல்ராசா, பிரான்சிஸ் சேவியர் (ஜேர்மனி), ஜெயராசா, நேசராசா (ஆசிரியர்), ஜெயமணி, மரியறோசா (லிகிதர்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற அருளப்பு, வரோணிக்கம் ஆகியோரின் சகோதரரும், அன்ரன் தேவராசா (ஜேர்மனி), அன்ரன் யோகராசா, வசந்தன், தேவராணி, ஜெயராணி, புவி, வினோ, எழிலரசி, ஸ்ரேலா, குயிந்தன், யுசிலா, நேசகுமார், யூட் ஜெனி, யூட் டெனிக்ஸ், யூட் றெவிஸ் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சிங்கநாயகம், அப்புத்தம்பி ஆகியோரின் சகலனும், செபரத்தினம் ஆசிரியரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று [22-01-1992] பிற்பகல் 3 மணிக்கு சூராவத்தை சேமக்காலையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அ. மாசிலாமணி**

சூராவத்தை,
சுன்னாகம்.

[19428]

## நா. ஸ்ரீநிவாசக் குருக்கள்

புங்குடுதீவு 5ஆம் வட்டாரம், பெரியபுலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய பிரதம குரு நா. ஸ்ரீநிவாசக் குருக்கள் கொழும்பில் காலமானார். இவர் சாரதாம்பாளின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, ரகுநாதக் குருக்கள், நாகேந்திரக் குருக்கள், ஷண்முகநாதக் குருக்கள், திருஞானசம்பந்த சர்மா, சர்வானந்த சர்மா [கனடா], குகனேஸ்வர சர்மா [கனடா], ஆனந்த சர்மா [கனடா], கிருஷ்ணலீலா, மீனலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் :
**இ. கமலநாதசர்மா**

233/3, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[19431]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 [illegible] 22-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.